ஓம்

தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 7	இரத்தாட்சி ௵ தை ௴ 1925 ௵ பிப்ரவரி ௴	சஞ்சிகை 10

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

பெண்ணுடம்பின் இழிவு.

"விழுக்கொடு வெண்ணஞ்சல்லா வுகிர்மயி ருமிழ்கட் பீளை
புழுப்பயில் குரம்பை பொல்லாத் தடிதடி கிடந்த போழ்தின்
விழித்தியார் நோக்கு கிற்பார் பிள்ளையார் கண்ணுட் காக்கை
கொழிப்பரும் பொன்னிற்றோன்றுங் கொள்கைத்தாற் கொடியேயென்றான்"

(இ-ள்.) "பூங்கொடிபோன்ற பெண்ணே! நிணமும், மூளை விசேடமும், இவையல்லாத நகங்களும், மயிரும், உமிழ்கின்ற கண்ணின் பீளையுமுடைய, புழு தங்கியிருக்கின்ற கூடாகிய பொல்லாத உடம்பு, (உயிரைவிட்டு நீங்கி) வேறுபட்டுக் கிடந்தபொழுது அதனை விழித்துப்பார்ப்பார் எவர்? ஒருவருமில்லை. (அஃதங்ஙனம் வேறுபட்டுப் பிணமாகாமல் தோன்றும்போது) காமுகர்க்குண்டாகும் இச்சையாலே இனிமையாகத்தோற்றும்; அதனால், காக்கை, கரிக்குருவியின் கண்ணுக்குக் குற்றமற்ற பொன்போலத் தோன்றும் கொள்கையை யுடையதாயிற்று என்று அறிஞன் கூறினான். (ஆதலின், மாதர் தேகம் இழிவுடையதே)" என்பதாம்.

உலக மயக்கிடைப்பட்ட ஆடவரால் இனிமையுடையதெனக் கருதப்படும் நிணம், மூளை முதலியவைகளையுடைய புழு குடியிருக்கும் கூடாகிய மாதர் தேகமானது பிணமானபோது எவரும் அதனை விருப்புடன் பார்க்கமாட்டார்கள். பிணமாகாதபோது அஃதாடவர்க்கு விருப்பினை யுண்டாக்குகின்றது; அங்ஙன முண்டாக்கும்போது ஆடவர் அதன் இழிந்ததன்மையை நோக்காது அதனை இனிமையுள்ளதாகக் கருதுகின்றனர். இவ்வாறு அவர்கள் கண்ணுக்கு அது இனிமையுடையதாகத் தோற்றுவது கரிக்குருவியின் கண்ணுக்குக் காக்கை பொன்னிறமாகத் தோற்றுவதுபோலாம். கரிக்குருவியும் கருமையுள்ளது; காக்கையும் கருமையுள்ளது; அதனால், அக்குருவிக்குத் தன்னிறம் போன்ற நிறத்தையுடைய காக்கையின் நிறம் பொன்னிறம்போல இனிமையாகத் தோற்றுவது இயற்கை. உலகத்தில் மனிதரும், மற்ற ஜீவராசிகளும் தங்கள் குணம் மற்றோரிடத்தி லிருந்தால் அதனை உயர்வாக நினைப்பது அவர்க்கும் அவற்றிற்கும் சுபாவம். ஆதலின், நிலையற்ற இழிந்த தேகத்தையுடைய ஆடவர்க்கு, அதைப்போன்ற இழிவுடைய பெண்ணுடம்பு விருப்பமுடையதாகத் தோன்றுகின்றது. இஃதறியாமையா லேற்படுவதாதலின், அறிஞர் தேக அநித்தியத்தை யுணர்ந்து அதனை வெறுத்து நித்திய வாழ்க்கையாகிய மோக்ஷத்தையடைய விரும்பவேண்டும். விழுக்கு-நிணம். வெண்ணஞ்சு-மூளை விசேடம். உகிர்-நகம். குரம்பை-கூடு. தடி-உடம்பு. தடிகிடந்த-வேறாகிக்கிடந்த; தடிதல்-வெட்டுதல், வேறுபடுத்தல். பிள்ளையார்- கரிக்குருவி.

(சீவகசிந்தாமணி 1584)

தருமசீலன்

இராத்தாட்சிஷு 'தைமீ.

"தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது"

இதன் பொருள்:— "தொழுது – (பிறரிடத்தில் அடிமையாளாக அமர்ந்து அவரை) வணங்கி, (அதனாலேவரப்பட்ட) ஊண்- உணவின், சுவையின் - உருசியைக் காட்டினும், உழுது - (நிலத்தை) உழுது (பயிர்த் தொழில் செய்து அதனாலே வரப்பட்ட,) ஊண்- உணவானது, இனிது - சுவையுள்ளது" என்பதாம்.

> " ஓவா வறுமை யுழந்தாலும் மற்றொருவர்
> ஏவா துயிர்வாழ்ந் திருத்தலே நன்றாகும்
> தாவாத செல்வம் தருமேனும் குற்றேவல்
> ஆவா கொடிது கொடிது................."

என்றபடி, எவ்வளவு வரும்படியை யுண்டாக்குவதா யிருப்பினும் பிறரிடம் கட்டுப்பட்டுச் செய்யும் உத்தியோகத் தொழிலானது, சுயேச்சையை ஒழித்து, அடிமைத்தனத்தையும் அச்சத்தையும் உண்டாக்குவதால் அது மிகவும் இழிந்த தொழிலேயாம்; அதினால் தேடியுண்ணும் உணவும் திருப்தியற்றதாதலின், இனிமையுடையதாகாது. உலகத்தில் தோன்றி யிருக்கும் மற்ற எல்லாத்தொழில் களினும் உழவுத் தொழில் மிகச்சிறந்தது. ஏனெனில், அது பிறருடைய தயவை எதிர் பார்க்காதது ; சுயேச்சையுடையது ; பல தானதர்மங்களைச் செய்வதற்கேதுவானது ; தேவர்களுக்கும் அரசர்க்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் துணையாயிருப்பது. சகலத்தையும் தனக்குட்படுத்திக் கொண்டிருப்பது ; இஃதில்லாவிடின் உலகமே நடைபெறாது. ஆதலின் இத்தொழிலே சிறந்ததென்பது எவரும் மறுக்க முடியாத விஷயம் ; இத்தொழிலையுடையவன் உலகத்துக்கே மகோபகாரியாதலின் மிக உயர்ச்சி யுடையவனாவான். ஆதலின், இத்தகைய பயிர்த்தொழிலால் வருவது சொற்ப மெனினும், அதனால் உண்டாகும் உணவு தேவாமிர்தத்தினும் இனிமையுடையதாம். ஆனதுபற்றியே நம் மூதாட்டியார் இச்சிறந்த நீதியை உயர்ந்ததாகக் கூறினர். இதைக்கடைப் பிடித்தொழுகுவார் எப்பொழுதும்

உலகிற் சிறந்து விளங்குவர். இக்காலத்தில் வேறு பயனற்ற இடம்பமான தொழில்களை விரும்பிப் பயிர்த்தொழிலைக் கைவிட்டு அல்லும் பகலும் அல்லற் படுவோர் இதனைக்கவனிப்பாராக.

(திருவருட்சகாயம்.)

செய்யுட் கதைகள்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-7, பக்கம்-142.)

இயல்வது கரவேல்.

நான்காவது தினம் நமது ஔவைப் பிராட்டியார் நமது பள்ளிக்கூடத்திற்கு எழுந்தருளினார். பள்ளிக்கூடம், அவரும் ஆச்சரியம் அடையும்படி அவ்வளவு தூரம் விருத்தி யடைந்திருந்ததைக் கண்டு களித்தார், தன்னுடைய உபதேசங்களைக் கேட்டு, மறந்து போகாமல், பிள்ளைகள் ஒவ்வொரு விநாடியும் அறஞ்செய ஆர்வமுற்று வருவதையும் கண்டார். சந்தோஷ மேலீட்டால், தன்னைக் கண்டதும் எழுந்து வணங்கிய குழந்தைகளை ஆசிர்வதித்து அமரச் செய்தார். பிறகு அவர்களைப் பார்த்து, "குழந்தைகளே! தினம் தினம் உங்களைப் பார்த்துவிட்டுப் போவது, எனக்கு எவ்வளவோ ஆனந்தத்தைத் தந்து வருகின்றது. ஆனந்த மேலீட்டால், இன்று, உங்களுக்கு, ஒரு இனிமை ஆன கதை கூறலாம் என்று கருதியிருக்கிறேன். இதற்கு முன்னால், நான் சொன்னவைகள் எல்லாவற்றையும் செவிசாய்த்துக் கேட்டதுபோலவே இதையும் கேட்பீர் என்று கருதுகின்றேன்;" என்று கூறினார்.

கதைகளுக்கே எப்போதும் ஒரு வசிகரசக்தி இருக்கின்றது. அச்சக்தி வேலை செய்கின்றது என்பது எவரும் ஒப்புக்கொள்ளாத விஷயம் அல்ல. ஆகையினால், ஒவ்வொரு பிள்ளையும், அளவிடப்பட இயலாதபடி ஆவல் அடைந்து, எப்படி எப்படி உட்கார்ந்து கொண்டால் தங்கள் தங்களுக்குக் கதை கேட்க அனுகூலமாயிருக்குமோ அந்தப்படி அந்தப்படி அமர்ந்து கொண்டார்கள். பாட்டியாரும் புன்முறுவலுடன் ஆண்டிருந்த ஒரு மேடையில் அமர்ந்து மேல்வரும் கதையைக் கூறினார்.

• • •

"அக்கா! அறுப்புக் காலம் கிட்டிவிட்டது. அப்பா, அகத்தில் ஒருவராயிருக்கிறார். வயதான அவர், அறுப்புக்காலமாகிய இந்தக்

காலத்தில், சமையல் வேலையையும் செய்து கொள்வது கஷ்டம். நாம் இங்கே என்ன செய்கிறோம்; பாட்டி போடும் சோற்றைத் தின்று சும்மா உட்கார்ந்து கொண்டிருப்பதைக் காட்டிலும், அவருக்கு உதவியாய், அங்கே சென்று ஆக்கிப் போட்டுக் கொண்டு இருப்போம் - வா! ஒரு வாரத்தில், அநேகமாய் அறுப்பு ஆகிவிடும். நாம் திரும்பி வந்து விடுவோம்;" என்று ஒரு நாள் தங்கை, அக்காளை அழைத்தாள்."

ஒளவையார் இதைச் சொல்லி முடித்தாரோ இல்லையோ, உடனே ஒரு குழந்தை எழுந்திருந்து, "பாட்டி! அப்படிக் கூப்பிட்ட தங்கையின் பெயர் என்ன? கூப்பிடப்பட்ட அக்காள் பெயர் யாது? தயவு செய்து கூறுங்கள்!"—என்று கேட்டது.

அதற்கு ஒளவையார் "அவர்களுடைய பெயர் என்னவென்று எனக்குத் தெரியாது. எனக்குமட்டும் அல்ல; அவள் இருந்த காலத்திலிருந்தவர்களுக்குங்கூட அவர்களுடைய பெயர் மறந்து போயிருக்கும் என்பதில் ஐயமில்லை. நான் உரைப்பதைக் கேட்கும் உங்களுக்கு ஆச்சரியமும் சந்தேகமும் உதிக்காமல் இருக்காது. 'பாட்டி! நீங்கள் சொல்வது சரிதான். அவர்களை யாராவது கூப்பிட வேண்டுமானால் எப்படிக் கூப்பிடுவார்கள். அவர்களுக்குப் பெயர்கள் இல்லாதிருக்குமா?' என்று கேட்பீர்கள். அது வாஸ்தவந்தான். அவர்களுக்குப் பெயர்கள் இருந்தன. அவர்களுக்கு முறையே பன்னிரண்டு ஆண்டுகளும், பத்துப் பிராயமும் ஆகிறவரையில், அவர்களுக்கிருந்த பெயர்களால் தான் அழைக்கப்பட்டு வந்தார்கள். ஆனால், நான் சொல்ல ஆரம்பித்திருக்கிற விஷயம் நடந்த பிறகு, அவர்களைக் கூப்பிடுகிறவர்கள், அப்பெயர்களைப் பிரயோகிக்கவே இல்லை. அவ்வாறு அநேக ஆண்டுகள் ஆகிவிட்டனவாகையினால் அவர்களுடைய பிறவிப் பெயர்கள் மறந்தே போய் விட்டன. அதனால் தான் நான் அவர்களை அக்காள், தங்கை என்று பொதுவாகப் புகன்றேன்.

அக்காள் அக்காளே!* தங்கை தங்கையே!† 'பிறருக்குத் தன்னாலான உதவியைச் செய்ய வேண்டும்' என்ற எண்ணம் அக்காள் உள்ளத்தில் ஒருநாளும் உதித்ததே இல்லை. ஆனால் தங்கையின் உள்ளம் அக்காளின் உள்ளத்திற்கு முற்றிலும் மாறாகவிருந்தது. அவள், இச்சரீரம் பரோபகாரார்த்தமாகவே உதவப்பட்டது என்ற எண்ணங் கொண்டு உழைப்பவள். தன்னுயுளில், ஒவ்வொரு நிமிஷ

---

* மூதேவி. † லக்ஷ்மி.

மும், ஒவ்வொரு விநாடியும் பிறருக்கு உதவிசெய்யக் கொடுத்திருப்பதாகக் கருதுபவள்.

அப்பேர்ப்பட்ட நற்குண பூஷணியாம் தங்கை, தன்னைக் கூப்பிட்டதும், அக்காள் வெறுப்புற்றாள். முகத்தைச் சுளுக்கிக் கொண்டாள். "வெயிலில் நின்று, அறுப்பைக் கவனித்துக் கொள்ளுகிறவருக்குச் சமையல் செய்து கொள்வது ஒரு சிரமமா? போடி-பேரடி பைத்தியக்காரி. இவ்வெயிலில் என்னால் நடுக்களத்திலுள்ள குடிசை வீட்டில் இருக்கமுடியாது," என்று கூறினாள்.

அதற்குத் தங்கை, "அக்கா! அப்பா தள்ளாதவர். அவர் போய் ஒரு பட்சம் ஆகப்போகின்றது. 'புறப்படுகிற காலத்தில் எனக்கு உதவிக்காக ஒருவரும் வரவேண்டாம்' என்று சொன்ன போதிலும், நாம் போவோமேயானால், சமயத்தில் வந்துதவிபதற்காகச் சந்தோஷப்படுவார். ஆகையினால், வா!-போய் அப்பா அகத்துக்கு வரும்போது வந்து விடுவோம்;" என்று மறுதரம் கூப்பிட்டாள். மூத்தவள்முன்னிலும் முனிவுற்று, "நீ-முளைத்து மூன்று அம்மாவாசை ஆகாத நீ—எல்லாம் தெரிந்தவளைப்போல் எனக்குப் புத்தி புகட்டவந்தது வெகு நன்றாயிருக்கின்றது. நாம்தான் இளங் கொடிகள். அவர் முற்றின கொடி. இளங்கொடி இளவெயிலைக் கூடத்தாங்குவது துர்லபம். அவ்வாறாக நாம் ஆண்டுச்செல்வது அழகல்ல;" என்றறைந்தனள்.

தங்கையோ, "அக்கா! நீ வராவிட்டால் போ! நான் போய் வருகிறேன்," என்று புகன்று தாயிடம் சென்று, தன் எண்ணத்தைத் தெரிவித்து, கொஞ்சம் கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு, காத தூரத்திற்கப்பாலிருந்த, கழனிக்குப் புறப்பட்டாள்.

வழியில் ஒரு இளமாமரம் இருந்ததை அவள் கண்கள் கண்டன. அம்மரம் பாதையின் ஓரத்தில் வளர்ந்திருந்தது. அதைச் சுற்றிப் பல முட்செடிகள் படர்ந்திருந்தன. முட்செடிகளினால் பாதைப் பட்டுக் கொண்டிருந்த அம்மாம், 'ஐயோ! கைகள் இருந்தால் இம்முட் செடிகளை அப்புறப் படுத்திக்கொண் டிருப்பேனே. கைகளைக் கொடுக்காத அப்பகவான் கால்களையாவது கடாக்ஷித்தருளி யிருப்பாரேல் இவ்விடத்தைவிட்டு நகர்ந்து அமர்வேனே!" எனத் துக்கித்துக்கொண்டிருந்தது.

அப்படித் துக்கித்துக் கொண்டிருந்த அம்மரம், தனியாய்ப் போய்க்கொண்டிருந்த தங்கையைப் பார்த்ததும், "அம்மா! உனக்

குக் கோடிபுண்ணியம் கிட்டட்டும்! நான் எவ்வளவு கஷ்டப்படு கிறேன் என்பதைக் கவனித்துப்பார்! தயவுசெய்து என் கஷ்டத் தைத் தீர்க்கக்கூடாதா?'' என்று கேட்டுக்கொண்டது.

அதைக் கேட்ட அத்தங்கை, 'அனாதையான அம்மரத்திற்குத் தன்னால் ஆன உதவியைச் செய்யவேண்டியது தன் கடமை' என் றெண்ணினாள். கீழே, ஓர் ஓரத்தில் தன் சோற்றுமூட்டையை வைத்து, தன்னால் ஆனமட்டும், அவ்விருக்ஷத்தைச் சுற்றிப் படர்ந் திருந்த செடி கொடிகளை அப்புறப்படுத்தினாள். பக்கத்திலிருந்த குட்டையிலிருந்து நீர் எடுத்துவந்து, வார்த்தாள். அது ஆனதும் தன் மூட்டையை எடுத்துக்கொண்டு தன் வழியே நடந்தாள்.

கொஞ்சதூரம் சென்றதும் ஒரு வேலியின் ஓரத்தில் வாடி அமர்ந்திருந்த வாலிபனைப் பார்த்தாள். அவ்வாலிபன் வழியே வந்துகொண்டிருந்த பெண்ணைப் பார்த்ததும், "அம்மா! ஏற்பது இகழ்ச்சி என்ற போதிலும், என் பசியின் கொடுமை அதையும் செய்ய என்னைத் தூண்டி விட்டது. பசிப்பிணி என்னை வாட்டுகின் றது. உங்களால் கூடுமானால் என்பசி நோயைத் தயவு செய்து நீக்க வேண்டும். என் சாண் வயிற்றுப் பசிவியாதியைச் சௌக்கியம் செய்வீரேயானால், தங்களுக்கு என்னாலான உதவியைச் செய்வேன்; தவறமாட்டேன்,'' என்று பசியினால் கம்மிய குரலில் கூறினான். பசியின் கொடுமை இப்பேர்ப்பட்டது என்றிதுவரையில் அறிந்தி ராத அம்மகள் அப்போது தான் அதன் கொடுமையை அறிந்தாள். அவ்வாலிபனுடைய தேகம் பசியின் கொடுமையால் மெலிந்திருந் தது. முகம்வெளுத்திருந்தது. கண்பஞ்சடைந்து, அறிவு கலங்கிப் பிராணன் இழக்குந் தறுவாயிலிருந்தான். தங்கை கருணைகூர்ந்து, "நாம் காலையில் சாப்பிட்டோம். மத்தியான்னம் சாப்பிடாவிட்டால் பாதகம் இல்லை. இம்மகன் ஆகாரம் எடுத்து ஐந்தாறுநாட்கள் ஆயி ருக்கும் போல் இருக்கிறது. இப்போது ஆகாரம் இல்லாவிட்டால் ஆயுள் அகன்றிடும் போல் காண்கின்றது. ஆகையினால் இவனுக்கு அன்னம் அளிக்க வேண்டும்'' என்று உள்ளத்தில் உன்னினாள். தன் கையிலிருந்த ஆகாரத்தை அவனுக்கு உதவி, வேண்டிய அளவு எடுத்துக் கொள்ளச் சொன்னாள். அம்மனிதன் அவ்வாகாரம் உண்டு, அக்காளின் தங்கையை ஆசீர்வதித்து அனுப்பினான்.

மூன்றாவதாக அவள் வழியில் ஓர் ஏழையைக்கண்டாள். அவன் கேட்டுக்கொள்ளத் தங்கை, பட்டாணி வாங்கித் தின்பதற்காகக் கை

யோடு கொணர்ந்திருந்த *காற்பணத்தை அவனிடம் அளித்து அப்புறம் அகன்றாள்.

பின்னர், நான்காவது, கடைசியானதும் ஒரு வியாதியஸ்தனைக் கண்டாள். அவன் ஒரு ஆலமரத்தினடியில் படுத்துக் கொண்டிருந்தான். அவன் தேகத்தில் அங்கங்கே காயங்கள் கிளம்பி யிருந்தன. காயங்களின் உபாதையைப் பொறுக்கமாட்டாமல் புலம்பிக் கொண்டிருந்த அவனைக் கண்டதும் தங்கையின் கண்களினின்றும் பலபல வென்று கண்ணீர்த்துளிகள் கீழேவிழுந்தன. "ஐயோ! அனாதை இயைய ஈண்டு இவ்விதம் அவஸ்தைப் பட்டுக்கொண்டு இருப்பவர் யாரோ, தெரியவில்லையே. பக்கத்தூரில் இருக்கும் ஆஸ்பத்திரிக்கு இவரை அழைத்துப் போவோமெனில், நம்மால் முடியாதுபோலிருக்கிறது. ஏனெனில், இவர் எழுந்து நடமாடவும் முடியாத நிலைமையில் இருக்கிறார்;" என்றெண்ணினாள். வெகு வேகமாய் அவர் படுத்திருந்த இடத்திற்கு ஓடினாள். அவருக்கு இன்ன விதத்தில்தான் உதவுவது என்றவளுக்கு விளங்கவில்லை, ஆதலினால் அவரைப் பார்த்துக் கொண்டே இரண்டு நிமிஷங்கள் நின்றாள். பிறகு, புதிதாய் ஒரு எண்ணந்தோன்றக் கீழே உட்கார்ந்தாள். அவ்வியாதியஸ்தரின் இருகைகளையும் அன்புடன் தடவிப் பிடித்துக் கொண்டாள். "அன்பரே!—பெரியவரே! அழகிய உமது சரீரம் கண்ட இடங்களில் காயப்பட்டு நீர் அவஸ்தை உறுவதைக் காணுகிற என் மனம் அனல் வாய்ப்பட்ட இழுதுபோல் உருகுகின்றது. தாங்கள் எழவும் சக்தியற்று இருப்பதாகத் தோன்றுகின்றது. இந்த ஆபத்துக்காலத்தில், எல்லாம் வல்ல எம்பிரான்தான் துணை. திக்கற்றவருக்குத் தெய்வமே துணை என்று தொல்லுலகம் சொல்லுகிறது. ஆகையினால், என் தந்தைக்குச் சமானம் ஆனவரே! தாம், எங்கும் ஏகமாயிருக்கும் ஈசனைத் துதித்தால், இந்த வியாதி எளிதில் நீங்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. பெரியவரான உங்களுக்கு, அறிவிலும், அநுபவத்திலும், ஆண்டினும் சிறியவளான நான், தெரியாததைச் சொல்லவில்லை. அங்கு-இங்கு - எனாதபடி எங்கும் பிரகாசமாய், ஆனந்த பூர்த்தியாயுள்ள அகில நாயகனுக்குத் தாங்கள் படும் அவஸ்தை தெரியாமல் இராது. தாங்கள், தமது திருவாயால், உடல்குழைய, என்பெலாம் நெக்குருக, விழிநீர்கள் ஊற்றென வெதும்பியூற்ற, 'மெய்தரு வேதியனே! வினைகெடக் கைதரவல்ல கடவுளே! தொழுத கை துன்பம் துடைப்பவனே! வான

* காற்பணம் = அரை அணா.

கத்து அமரர் தாயே! பரம்பரச் சோதியே!' என்று ஒருதரம் உரைத்தபோதிலும், ஊசி காந்தத்தினை அடைவதுபோல் அவர் உப்புத்தியால் கட்டுப்பட்டு, எதிர்வந்து, மடல் அவிழ்மலர் வாசனையைப் பரப்புவதுபோலும், நீருண்டகருமேகம் நீரைப் பொழிவது போலும் தன் கருணைத் துளிகளை வார்த்து, இக்கடுநோயைச் சடுதியில் தீர்ப்பர். ஆகையினால் வருத்தமுற வேண்டாம். நான் கூடிசீக்கிரத்தில் திரும்பி வந்துவிடுவேன். அதற்குள், ஆலமுண்டு அமரர் துயர்தீர்த்தோன் அருளால் இவ்வியாதி ஓடிப் போய்விடும். அப்படி இல்லாவிட்டால், நான் உம்மை என் இல்லம் அழைத்துப் போய் ஏற்ற ஏற்பாடுகள் ஏற்படுத்துகிறேன்;'' என்று அடிக்கடி தன் கண்களினின்றும் கிளம்பிக் கீழே விழுந்துவிடலாமா வேண்டாமாவென்று கலங்கிக்கொண்டிருந்த கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக்கொண்டே கூறினாள்.

தனக்குத் தைரியம் சொல்லக்கூடிய மனிதர்கூட ஒருவரும் இன்றி அவஸ்தையுற்றுக் கொண்டிருந்த வியாதியஸ்தர் மிக்க சந்தோஷமெய்தினார். கடவுளே, தன் குறைகளைத் தீர்ப்பதற்காகக் கன்னியுருவங்கொண்டு வந்திருப்பதாக எண்ணி, இவ்வளவு அவ்வளவு என்னாத ஆனந்தங்கொண்டார். கடவுளை இடைவிடாது துதிப்பதாகக் கூறினார். பேச்சு மும்மரத்தில் வியாதிவலி தெரியாமல் இருந்ததாகையினால், தன் காயங்கள் ஆறிவிடும் என்ற தைரியமும் அவர் உள்ளத்தில் உதித்தது.

சிறிதுநேரம் ஆனதும் தங்கை அன்னானை நோக்கி, ''சுவாமி! நாழிகை ஆகிவிட்டது. மன்னிக்கவும். நான் போய் வருகிறேன். தனக்குக் கெடுதல் கருதிய இராவணனுக்கும் கடவுள் கருணைக் காட்டியிருக்கிறார்;'' என்று இன்னும் பலவித வசனங்கள் உரைத்துத் தன் தந்தை இருந்த கழனியைக் குறுகினாள். தான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க இஷ்டப்படாமல் தன்மகள் வந்ததைக் கண்டு களித்தார் தந்தை. அவள் சமைத்துப் போடச் சந்தோஷமாய்ச் சாப்பிட்டார்.

ஒருவாரம் ஆயிற்று.

தகப்பனார் தன் மகளை விளித்து, ''கண்ணே! நீ சமயத்தில் வந்துதவியது எனக்கெவ்வளவோ இன்பத்தைத் தருகின்றது. அறுப்பு அநேகமாய் முடிந்து விட்டது. இன்னும் இரண்டொருதினத்தில் நான் வந்துவிடுகிறேன். நீ பேய்வா!'' என்று சொல்லி, அவள்

ளையாடுவதற்கான அநேக பொம்மைகளும்; உடுத்திக் கொள்வ தற்காக விலையுயர்ந்த ஆடைகளும் கொடுத்தனுப்பினார்.

தங்கை தகப்பனார் தந்த சாமான்களையெல்லாம் ஒரு மூட்டை யாகக் கட்டி, அம்மூட்டையை ஒரு எருதின் மேல் ஏற்றி, அதை நடத்திக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினாள்.

வழியில் ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில், இரதகஜதுரக பதாதிகளுடன் ஓர் அரசன் அமர்ந்திருந்ததைக் கண்டாள். அப்பக்க மாய் இவள் ஏகுங்காலத்து, சில சேவகர்கள், இவளுக்கு முன் வணக்கமாய் விழுந்தெழுந்தனர், "அம்மணியாரே! எங்கள் அரசர் தம்மை அழைத் வரச் சொன்னார்," என்றனர்

அப்பெண் என்ன சங்கதியோ ஏதோ வென்று உள்ளம் நடுக் கிட அரசனை அணுகினாள். அரசன், தான் அவளுக்காகத் தயாராக வைத்திருந்த ஒரு பவுன் மூட்டையை எடுத்துக்கொடுத்துக்கொண் டே, "அம்மா! நீ, சிறியவளாயிருந்த போதிலும் பெரியதொரு உதவி யை எனக்குச் செய்திருக்கிறாய்," என்று சொன்னான். அந்தப்பெண் திடுகிட்டு, "அரசரே! நான் ஒருபோதும் உங்களுக்கு உதவவில்லை என்று எனக்குத் தோன்று கின்றது. என் உதவியைத் தாங்கள் அடைந்திருந்தாலும் உங்களுடைய பரிசை நான் பெற்றுக்கொள் ளத்தக்கவள் அல்ல. ஏனெனில் நான் ஒருகால் உங்களுக்கு உதவி செய்திருப்பேனே யானால், பிரதி உபகாரத்தை இச்சித்துச் செய் திருக்க மாட்டேன். பிறருக்கு உதவவே இச்சரீரம் நமக்குக்கொடுக் கப்பட்ட தாகையினால், நான் என் கடமையை நிறைவேற்றிக் கொண்டு இருந்திருப்பேன். என் கடமை நிறைவேற்றிக் கொண்டு இருத்தற்காகத் தாம் தரும் பரிசைப் பெற்றுக் கொள்ளல் பொருத் தமானதல்ல ஆகையினால், தாம் எனக்கு அளிக்கும் இனாம் அடைய வெறுப்பதைப் பற்றி மன்னிக்க வேண்டும் தயவுசெய்து!" என்று வேண்டி நின்றாள்.

அவ்வாறு அவள் இருக்கக் கண்ட இறைவன்; "அருமைக் கண்மணீ! ஒரு வாரத்திற்கு முன்னர், என்னை நீ இந்த ஆல்மரத் தின் அடியிலேயே சந்தித்திருக்கிறாய். ஆனால் அப்போது நான் இந்த ஆடையாபரணங்களுடன் இல்லை. குதிரையின் மேலிருந்து, கீழே விழுந்து, காயமுற்றுக் கவனிப்பாரற்றுக் கிடந்தேன். இப் பொழுது என்னைச் சுற்றி நின்று கொண்டிருப்பவர்கள் எல்லோரும், அப்போது வழியறியாது மூலைக்கொருவராய்ப் போயிருந்தார்கள். நான் ஏறிக்கொண்டிருந்த குதிரை என்னைக் கீழே தள்ளிப்போய் விட்டது. அரசன் என்று யாரும் அறிந்து கொள்ளா திருப்பதற்காக என் விலையுயர்ந்த ஆடைகளைத் திருப்பிக் கட்டிக்கொண்டிருந்தேன். அச்சமயம், கடவுளைத் தொழும்படி நீதான் எனக்குப் புத்திப் புகன்றாய். நான் கடவுளைப் பஜித்துவந்ததால் என் வேதனை நீங்கி,

4

21046Z

சொன்ன காலத்திலும் சீக்கிரமாகவே, சௌக்கியம் அடைந்து விட்டேன். நான் அநேகமாய் சௌக்கியம் உற்றபிறகு தான் என்னைச் சுற்றி யிருக்கும் இவர்கள் வந்து சேர்ந்தார். நீ, கூடிய சீக்கிரத்தில் வந்து விடுவதாகக் கூறினபடியால், உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தேன். நீயும் எதிர்ப்பட்டாய். தயவு செய்து நான் கொடுக்கும் பரிசை, வெறுக்காமல் பெற்றுக் கொள்ள வேண்டும்;" என்று அன்புடன் உரைத்தார்.

தங்கையோ, "அரசரே! நான் பெற்றுக்கொள்ள மறுப்பதனால் தம்மைப் பரிகசிப்பதாகத் தாம் தம் மனதில் பதித்துக் கொள்ளலாகாது. இப்பரிசைப் பெற்றுக் கொள்வேனேயானால், பரிசுக்காக ஆசைப்பட்டு உதவிசெய்ததாக ஏற்படும் ஆயினும் ஒன்று உரைப்பேன். யுக்தமானதாகப் பட்டால் தயவு செய்து ஏற்றுக் கொள்ளும். எனக்குக் கொடுப்பதாகத் தாம் கூறும் தனத்தைத் தர்மசத்திரம் ஒன்று கட்டி, அதில் நாள்தவறாமல் அன்னதானம் நடந்து வரும் படியாய் நல்ல ஏற்பாடு செய்து வருவது நல்லது," என்று அன்பும் அடக்கமும் ஒழுகச் சொன்னாள் அரசனும் அப்படியே செய்வதாக வாக்குறுதி செய்து பட்டணம் போய்விட்டான்.

அவ்விடமிருந்து புறப்பட்ட தங்கை ஒரு பெரிய தனிகனைச்சந்தித்தாள். அவன் அவளைக்கண்டதும், "அம்மா! நீ கருணையுடன் கொடுத்த காப்பணம் எனக்கெவ்வளவோ உதவி செய்தது. பக்கத்தூர் கோவிலுக்கு ஒருவர் வந்தார். அவர் கொண்டு வந்த கற்பூரப் பொட்டலம் வழியில் விழுந்து விட, கற்பூரம் வாங்கக் கையில் காசில்லாமல் கலங்கிக் கொண்டிருந்தார். கடைக்காரன் கடன் கொடுக்க மறுத்தானாகையினால் அவ்வழியாய்ப் போய்க் கொண்டிருந்த என்னைக் கூவி, 'ஏதாவது பணம் இருக்கிறதா' என வினவினர். நான், நீ எனக்குக் கொடுத்த காப்பணத்தைக் கொடுத்தேன். அவர் என் மேல் அதிக அன்பு கொண்டது மன்றி, கடவுளின் பூஜையைக் குறைவின்றி முடித்த என்னை முன்னுக்குக் கொண்டு வர வேண்டிய பிரயத்தினங்களைச் செய்து வருகிறார். தாங்கள் எனக்கு அக் காலை காப்பணம் உதிவாமலிருந்தால் இந்த நிலைமை எனக்கு வந்திராது;" என்று, சொல்லி, அவளுக்காகத் தான் கொண்டுவந்திருந்த தங்கவிக்ரஹம் ஒன்றைக் கொடுக்கப்போனான். ஆனால், தங்கை, அரசனிடம் சொன்னது போலவே சொல்லி, அதைப் பெற்றுக் கொள்ள மறுத்தாள்.

மூன்றாவதாகத் தான் யாருக்கு அன்னம் உதவினளோ அவள் இருப்பதைக் கண்டாள், அவன் கூட, அவள் வருகைக்காக வழி எதிர்பார்த்திருந்தவன். அவன் அவளைக் கண்டதும், "அருமைக் குழந்தாய்! நீ அன்று எனக்குச் செய்த உதவி என்றும் மறக்கத் தக்கதல்ல. அன்று தினம் நான் கையில் ஐம்பதினாயிரம் ரூபாய் வைத்திருந்தேன். அவ்வளவு ரூபாய் வைத்திருந்தும் அது என்

பசியைத் தீர்க்கவில்லை. நீ மட்டும் அப்போது, அன்னம் அளிக்காது இருந்திருந்தால் என் பிராணன் போயே யிருக்கும்;'' என்று சொல்லித் தானும் இனம் அளிக்க ஆவலுடன் முன் வந்தான். ஆனால், தங்கை அதையும் அங்கீகரிக்க இஷ்டபபட வில்லை.

கடைசியாக மாமரத்தினருக்கில் வந்தாள். அது கனித்து இருப்பதைக் கண்டு களித்தாள். தன் தகப்பனார் தந்த சீருடன் வீட்டில் நுழைந்தாள்.

இதைக்கண்டதும் அக்காளுக்குப் பொறாமை உண்டாயிற்று, நானும் அப்பாவிடம் அதிக சீர் அடைந்துவருகிறேன். என்று புறப் பட்டாள். மரத்திற்கருகு வந்தாள். மரம், தங்கையை வேண்டிக் கொண்டது போலவே இவளையும் வேண்டிக்கொண்டது. ஆனால் அக்காள், அதிக சினங்கொண்டு இதைத் தவிர எனக்கு வேறு வேலை இல்லையோ? அந்த மாதிரி நீ அவஸ்தைப் படவேண்டும் என்று தான் ஆண்டவன் இருக்கும் இடத்தை விட்டு அசைய முடி யாதபடி உன்னை உண்டாக்கினர்;'' என்று சொல்லிக் கொண்டே அப்பாலே போனாள்.

இவளும், தங்கையைப்போலப் பசியால் மெலிந்த ஒருவனையும், பணத்திற்காகப் பிச்சை கேட்ட ஒருவனையும், வயிற்று வலியால் பாதைப்பட்டுக் கொண்டிருந்த ஒருவனையும் சந்தித்தாள். ஆனால் அக்காள் ஒருவருக்கும் உதவவில்லை பசியால் பாதைபட்டுக்கொண் டிருந்தவனையும் பார்த்ததும், பலவாறு தூஷித்து "அரிசி கிராக்கி யாயிருக்கிற சங்கதி உனக்கு எங்கே தெரியப் போகிறது?'' என்று புகன்றாள்.

அவளைப்பற்றி நான் அதிகம் சொல்லப் போகின்றதில்லை. அவள் ஒருவருக்கும் தன்னால் ஆகக்கூடிய உதவியைச் செய்ய வில்லை. தந்தையிடம் சென்றதும் அவர், "அவளைச் சீறி, 'நான் கஷ்டப் பட்டுக் கொண்டு இருந்தபோது நீ வாவில்லை. ஏதாவது லாபம் கிடைக்கும் என்று இப்போது வந்தாயோ! போ! போ!! இங்கே ஒன்று மில்லை;'' என்றறைந்து அனுப்பி விட்டார்.

ஆகையினால் அக்காள் அழுது கொண்டு திரும்பினாள். சந்தித் தவர்கள் 'இவள் நமக்கு உதவவில்லை' என்று கொண்ட மட்டும் உதை கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த பலாத்கார ஆசீர்வா தங்களை எல்லாம் பெற்றுக் கொண்டு அக்காள் இல்லம் நுழைந் தாள்.

அன்று மாலை தந்தையும் வீடுவந்தார். நடந்த சமாச்சாரங்களை அறிந்தார். தன் மூத்தமகளை நோக்கி 'நீயும் தங்கையைப்போல் பிறர்க்குதவ வேண்டும்.' என்று போதித்துக் கொண்டிருக்கும் போது, அவ்வூர் அரசன் ஆண்டு எய்தி, தங்கையைப் பெற்றோர் அனுமதியின மேல்; தன் மகனுக்கு மனைவி ஆக்கிக் கொண்டான்.

அந்த நாள் முதற்கொண்டு எல்லாரும் அக்காளை அபகாரி என்றும், தங்கையை உபகாரி என்றும் அழைத்து வருகிறார்கள்."

*   *   *   *   *   *

இக்கதையைக் கூறியதும் ஔவையார் ஆண்டுக் குழுமியிருந்த குழந்தைகளைப் பார்த்து, "குழந்தைகாள்! உங்களுடன் இன்று அதிக காலம் கழித்துவிட்டேன். ஆகையினால் போய்வருகிறேன்.

நீங்கள் எல்லாரும், தங்கையைப்போல் உபகாரி என்று அழியாத நாமம் அடையவேண்டும். தேகத்தாலும், ஆகாரத்தாலும், பணத்தாலும், வாக்காலும் ஆன உதவியைச் செய்துவர வேண்டும். நீங்கள், பிரதி உபகாரம் விரும்பி உதவலாகாது. கைம்மாறு உகந்து உதவுவதைக்காட்டிலும் உதவாமல் இருப்பதே ஏற்றது. உங்களால் இயன்ற உதவியைச் செய்ய மறுப்பதைப்போன்ற பாவம் வேறில்லை. உங்களால் இயல்வது கரவேல். இயல்வதைக் கரவாமல் இருந்தால் தங்கையைப் போல் கீர்த்தியடைவோம். மன அமைதி அடைவோம். சந்தோஷம் சித்திக்கும். நமக்கு, நாம் வேண்டாதிருந்த போதிலும், நன்மை, தேடிவந்து சேரும். நாம் பிறருக்கு உதவுவதைக்காட்டிலும் ஏற்ற தருமம் இல்லை." என்று கூறி நான்காவது தின, தன் கடமையை நிறைவேற்றினார்.

பிள்ளைகளும் சந்தோஷம் எய்தி 'இயல்வது கரவேல்' என்பதை மறவாமல், தம்மால், இயன்ற உதவியைச் செய்து வருவதாகத்தீர்மானஞ் செய்து கொண்டார்கள். (தொடரும்)

மேல்குடிசே. கந்தசாமி.
தமிழ் ஆசிரியன், குடியாத்தம்.

அஸ்யவிரத்தஸ்யகதா.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-7, சஞ்சிகை-8, பக்கம்-157.)

(ஸ்லோகம்.)

𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯𑌦𑍇𑌹 𑌜𑍍𑌵𑌰𑌾𑌪𑌿 𑌸𑌂𑌰𑍋𑌪𑌪𑍂𑌰𑍍𑌵 ।
𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑍍𑌵𑌿𑌧𑍃𑌤𑌿𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌯 𑌤𑌦𑍀𑌤𑌾𑌚𑌕𑍍𑌰𑍀 ।
𑌮𑍁𑌕𑍍𑌤𑌚𑍍𑌛𑌦𑍍𑌵𑍍𑌯 𑌤𑌪𑌸𑍋 𑌵𑌿𑌧𑌿𑌮𑌾 𑌵𑌿𑌧𑌾𑌯
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑌦𑍀𑌤𑌾𑌹𑌿 𑌜𑌿𑌨𑌪𑌂𑌵𑌿𑌭𑍁𑌮𑌰𑍍𑌚𑌯𑌾𑌮𑌿 ॥

விப்ரஸ்யதேஹ ஜவராபி ஸம்ரோப பூவ
புஷ்பாஞ்சலிர்வித்ரு முபாஸ்ய தமீதாசக்ரீ
முக்தச்சதிவ்ப தபஸோ விதிமா விதாய
நித்திபம் ததிதாவுறி ஜினபம்விபு மர்ச்சயாமி.

ஜம்பூத்வீப பூர்வவிதேஹ ஸீதாநதிதக்ஷிண தடத்து மங்களாவதி விஷயஸ்த ரத்னஸஞ்சய புராதிபதி ராஜா வஜ்ரஸேனன்:

அவனுடைய தேவி ஜயாவதி, அந்த ஜயாவதிதேவியும் ஒரு நாள் ப்ராஸாதாக்ரத்தில் நிஜஸகீஜன பரிவ்ருதயாகி திவ்யாசனரூடாகி திசாவலோகனம் பண்ணியிருப்ப, ஜிநசைத்யால யத்தினின்றும் காவ்ய சரிதாதிகளை படனம் செய்து நிஜக்ருஹாபிமுகமாக வருகிற புரஜன பாலகுமாரர்களைக் கண்டு எனக்கு எப்பொழுது புத்திரன் பிறக்கப் போகிறானென்று விவிதசிந்தானை சஹிதமாயிருப்பதுடன் புந: புந:, புத்திர சிந்தனையினால் மனோவிஷாதத்துடனிருப்ப, நேத்திர ஜலாங்கித முகத்தைக்கண்டு ஒரு சகியானவள் அவளுடைய கருத்தறியாதவளாய் வஜ்ரசேன மகாராஜனுக்கு அறிவிப்ப, தேவியினுடைய ரோதனாதிவ்ருத்தாந்தத்தினைக் கேட்டு ராஜாதி ஜபத்னி சமீபமடைந்து அவளைக் கண்டு தேவியை அர்த்தாசனத்தில் இருக்திநிஜோத்திர வஸ்த்ரத்தினால் நேத்ரத்வயோத் பன்ன ஜலப்ரவாஹத்தைத்துடைத்து சந்தோஷ கரவிசித்ரப்ர யோத்திகளால் சந்தோஷிப்பித்து ராஜாவானவர் கேட்டார். வாராய் தேவியே, உன்னுடைய துக்க காரணம் யாதென்று வினவ அவளும் மூகிபூதயாக இருப்ப, ஒரு யாத்ரியானவள் சொல்லுவாள் வாராய் ராஜனே அன்னிய புத்திரர்களைக் கண்டு துக்கிதையாயினால் தேவி புத்ரார்த்தி நீ என்று கேட்டு ராஜா சொல்லுவார் தேவியே நீயானவள் என்னுடன் கூட ஜிநாலயத்திற்கு வா போவோம். ஜிநேந்திரர்களுடைய பூஜையைச் செய்வோம் என்று பிரியஹித வாக்கியங்களைச் சொல்லி தேவியினுடைய சர்வ துக்கத்தைப் போக்கடித்து ஜிநாலயத்தை அடைவித்து தேவியுடன் ஜினரை பூஜித்து தத்ரஸ்த ஞான சாகர முனிகளைக் கண்டு வந்தித்து தர்மஸ்ரவணானந்தரம், ராஜாவினவத்துடன் முனியைக் கேட்டார், இந்த தேவிக்கு புத்திரன் பிறப்பானா இல்லையாவென்று கேட்க முனிவரனுமருளிச் செய்வார்.

ஷட்கண்டாதிபதியும் காமாங்கதரனுமான ஸத்புத்திரன் ஆகப் போகிறான் என்று சொல்லத் தம்பதிகள் வரசாமகோசரா சந்துஷ்டர்களாகி முனியை வந்தித்து நிஜக்ருஹத்தை அடைந்தார்கள். பிறகு சிறிது தினத்துக்குள் புத்திரன் பிறக்க, அந்த புத்திரனுக்கு ரத்தினசேகரனென்று நாமகரணஞ்செய்து புத்ரோத்ஸவமும் செய்து மாதாபிதாக்கள் பந்து ஜனங்களுடன் சுகானந்தத்துடன் இருந்தார்கள். புத்திரன் சௌக்கியத்தினால் க்ரமமாக விருத்தி அடைந்து இருப்ப, ஸப்த வருஷானந்தரம் கறதஜிநாலயத்தில் ஜிநபிம்பங்களுக்கு பூஜை செய்து ஜைநோபாத்யாய ஸமீபத்தில் சுபதின முஹூர்த்தத்தில் சாஸ்த்ராத்யானஞ் செய்கிறதற்கு ராஜா விட்டார். சிறிது தினத்திற்திற்குள் சகல சாஸ்திராஸ்ரவித்யா குசலனாகவும், யௌவனாக்ராந்தனாகவும், ஆனார். ஒரு திவசத்தில், சைத்ரோசத்தில் அந்த குமாரன் வநத்தை ஜலக்ரீடார்த்தமாக அடைந்தார். ஜலக்ரீடார்த்தமாக அடைந்தகுமாரன் ஜலக்ரீடை செய்தபிறகு அந்த வனத்தில் மணிமண்டபஸ்தித விசித்ர ஸிம்மாசனாரூடனாகிய ராஜகுமாரன் கணிகாஸ்திரீகளால் செய்யப்பட்ட விசித்ரஹாவபாவ விலாஸஸஹித

நர்த்தன விசேஷத்தைப் பார்த்துக்கொண்டு எப்பொழுது இருக்கின்றான். அப்பொழுது ஒரு வித்தியாதரன் ஆகாயத்தில் செல்லுகிறவன் அவனுடைய விமானம் செல்லுகிறதில்லை. விமான ஸ்தம்ப, அந்த காரணத்தினின்றும், பூதலத்திலிறங்கி குமாரன் சமீபமடைய பூர்வ ஜன்ம ஸம்ஸ்கார வசத்தால் பரஸ்பர தர்சனத்தால் ஸ்நேஹ பாவத்தை அடைந்தபிறகு இரண்டுபேரும் உசித சம்பாஷணை நந்தாம் ஏகாசனத்தில் உட்கார்ந்து இருக்கும்பொழுது ரத்தினசேகர குமாரன் வித்தியாதரனை நோக்கிக்கேட்டார். வாராய் வித்தியாதரனே நீயார்? எங்கிருந்து வந்தாய்? உன்னுடைய தர்சனத்தினால் எனக்கு ப்ரீதியாகிறதென்கிற வார்த்தையைக் கேட்டு வித்தியாதரன் சொல்லுவான். வாராய் மித்திரனே! இந்த விஜயார்த்தகிரி தக்ஷிண ஸ்ரேணியில் ஸுகண்ட புராதிபதி ஜயவர்மனுக்கும், விஜயாவதிக்கும் புத்திரன் நான் ஹீமகவாகனனென்று பெயரை யுடையவன் ஸகலவித்யாதிபதி ஜாதி வித்யா ஸமூகத்தையும் ராஜமந்திரி புரஸ்ஸரமாய் என்னுடைய பிதாவானவர் என் பொருட்டு ராஜ்ய பாரத்தையும் கொடுத்து தீக்ஷித்தனானபிறகு ஸ்வேச்சா விஹாரியாய்ப்போகிற நான் உன்னை கண்டேனென்று சொல்லி ராஜகுமாரனைப்பார்த்துச் சொல்லுகிறான். நீயார்? உன்னுடைய பெயரென்ன? உன் தேசமாத்திரபித்ராதி விர்த்தாந்தத்தினை ஸவிஸ்தாரமாகச் சொல்லென்று கேட்க, குமாரனும் சொல்லுகிறான். இந்த ரத்தினசஞ்சய புராதிபதி வஜ்ரஸேனன் அவனுடைய புத்திரன் நான் என்பெயர் ரத்தின சேகர நாமத்தை யுடையவனென்று சொல்லப்பட்ட வசனத்தைக்கேட்டு சந்துஷ்டனாகி வித்தியாதரன் ராஜகுமாரனுடன் அதிஸ்நேஹத்தை அடைந்தான். பிறகு ரத்தினசேகரன் சொல்லுவான் வாராய் மித்திரனே! எனக்கு மேரு ஜினாலயாத்ராலய தர்சனத்தில் மனதுமானது இருக்கிறது என்றான். வித்யாதரன், அப்படியானால் என் விமானத்தில் ஏறிக்கொள்; நாமிருவரும் மேருதர்சனத்துக்கு போவோம் என்றாள். கஜராதிபதியினுடைய வாக்யத்தைக்கேட்டு அரசகுமாரன் ஸவஸாதித வித்தையினால் அவ்விடம் போக வாஞ்சிக்கிறேன். என்றான். வித்தியாதரன் சொல்லுவான்; என்னுடைய மந்திரத்தை க்ரஹித்து ஜபிக்கக்கடவாய், வித்யா சாதக மாகுமென்றுசொல்ல, உடனே ராஜகுமாரன் பரிவாரஜனத்தைவிட்டு வித்யாதரனையே உத்தத சாதகனாகச்செய்து பாவத்து காலம் ஜபிக்கின்றானே தாவத்து காலத்துக்குள் பஞ்சசத வித்தைகள் வந்து சொல்லுகின்றன. வாராய் விபுவே, எங்களுக்கு ப்ரோக்ஷணத்தைக் கொடுங்கள் என்று கேட்க, குமாரன் ஆஞ்ஞையினால் விசாஹித்யா நார்பித விமானாரூடர்களாகி இரண்டரை த்வீபங்களிலும் இராநின்ற ஜினாலயங்களை வந்தித்து, பூஜித்து நிஜதேசத்திலிருக்கிற விஜயார்த்தமாக கிரியிசையில் விளங்காநின்ற சித்தகூட சைத்யாலயத்தில் அடைந்து ஜினதிகளை பூஜித்து அக்கிரமண்டபத்தில் உட்கார்ந்து கொண்டு எவ்வளவுகாலம் யிராநின்றார்களோ

அவ்வளவில் தத்விஜயார்த்த தக்ஷிண ஸக்ரதானு புராதிபதியாகிய
வித்வித்வேகனுக்கும் சுக காரிணிக்கும், புத்திரி மதனமஞ்சுஷை
என்பாள், அந்த மதன மஞ்சுஷையானவள் சகிஜனத்துடனே கூட
ஜினனை தெரிசிக்கிறதற்கும், பூஜிக்கிறதற்கும் வந்தாள். அவள்
ரத்னசேகரனைக் கண்டு மோகாக்ராந்தயாயினள். இந்த நடக்கை
யை தாதியால், அவள்பிதா கேட்டுவந்து மித்திரனுடனே கூட
நிஜக்ரஹத்தை அடைவித்து விஜயார்த்தகிரியி லுண்டான வித்யா
தர புத்திரர்களுடைய பயத்தினால் ஸ்வயம்வரமானது செய்யப்பட்
டது. மதனமஞ்சுஷையினால் வித்யாதர குமாரர்களுக்குள்ளே ரத்
தினசேகரன் மிசை ஸ்வயம்வரமாலை போடப்பட்டது. அப்பொ
ழுது சர்வ வித்தியாதரர்களும் கோபிக்கப் பட்டவர்களாய் தங்கள்
மந்திரிவாக்கியங்களை மீறிக் கடந்து யுத்தோத்யோகத்தை அடைந்து
இருந்தார்கள். அப்படியிருந்தும் மறுபடி மந்திரி வசனத்தால்
சந்தியின்பொருட்டு ரத்தினசேகரனிடம் அஜிதனென்னும் பெயரை
யுடைய தூதனை அனுப்பினார்கள். இந்ததூதன் ரத்தினசேகரனை
அடைந்து அறிவித்தான். வாராய் மஹாராஜனே தூமசிகப் ரப்ரதி
வித்யாதரர்களால் உன் சமீபம் அனுப்பப்பட்டேன். அந்த வித்யா
தரர்கள் அனைவரும் உன்னிடம் ஸ்நேஹாதிக்யத்தை அடைந்து
சொல்லுகிறார்கள். வித்யாதர கன்னிகையை எங்களுக்குக் கொடு
த்துவிட்டு ரத்தினசேகரன் சுகமாக இருக்கக்கடவன். அது கா
ரணத்தினால் கன்னிகையை அவர்களுக்குக் கொடுத்துவிடு என்று
சொல்லப்பட்ட வாக்யங்களைக் கேட்டு மித்திரனாகிய மேகவாஹன
வித்யாதரன் முகத்தைப் பார்த்து சொல்லுவான் வாராய் தூத
னே இந்த துர்ப்புத்தியினாலே உன் ராஜாக்களுடைய சிரசுகள்
கபந்தங்களில் நிற்கின்றனவோ, நிற்கமாட்டாது. யுத்த ரங்கத்
திற்கு வரச்சொல்வாயென்று அரட்டி அனுப்பிவிட்ட பிறகு இந்த
மித்திரனுடனே திர்க்காலோசித்து யுக்தோன்முகனுக்கு, மித்
திரனோடு வித்யானுபாவத்தினால் சாதுரங்க சேனையைச் செ
ய்துகொண்டு யுத்தாங்க பூமியை அடைந்தார். முன்னமே யுத்
தாங்கணத்தில் வந்திருக்கிற ராஜாக்களுடைய ஸ்திதியைக் கண்டு
ரத்தினசேகர மேஹவாஹனர்கள் மாமனாகிய வித்யுத்வேக ராஜ
னுடன் யுத்தபூமியில் உத்யுக்தர்களாய் இருந்தார்கள். வித்யாதர
ராஜாக்களால் ப்ரேரிக்கப்பட்ட ப்ரத்யவர்க்கம் ரத்தினசேகரனால்,
ப்ரேரிக்கப்பட்ட ப்ரத்யவர்க்கங்களுடனே யுத்தம் பண்ணிற்று.
தீர்க்கயுத்தத்தில் வித்யாதரவர்க்கம் ரத்னசேகர வர்க்கத்தால் திரஸ்
கரிக்கப்பட்டு ஓடிவிட்டது. அப்பொழுது அஸ்வாரூடர்களும் ரதி
கர்களும், விழர்களும், யானைகளும் நஷ்ட மடைந்ததுகள். ஸ்வ
சைன்னியங்களைக் கண்டு கோபிக்கப்பட்ட வீரர்களாலும் ஸமஸ்த
பட்டராக்கள் சூழப்பட்ட ரத்தினசேகரன் நிரந்தரமாய் விடப்பட்ட
தீக்ஷ்ண பாணங்களால் கசடா படவீரர்களை ஹதம் பண்ணினார்.
பிற்பாடு வித்யாதரர்கள் தீக்ஷ்ணயிக பாணங்களை விட்டார்கள்.

அவர்களை பிரதிவித்யா பாணங்களால் ரத்னசேகரன் ஜெயித்து சொல்லுவான் இப்பொழுதாகிலும் என் பாதசேவையைச் செய்து ப்ராணதாரிகளாய் ஸுகத்தினால் ஜீவிக்கக் கடவர்கள். என்று சொல்லப்பட்ட மதுரஹித வாக்கியங்களைக் கேட்டு சர்வவித்யாதரர்களும் பீதகர்களாய் குமாரன் பாதகமலத்தை சரணமாக அடைந்தார்கள். அதன்பிறகு லோகாச்சர்ய விபூதியோடு ஸமஸ்தவித்யாதர சதுரங்க ஸைன்னியங்களுடன் மாமன் நகரமடைந்தான். சுப முஹூர்த்தத்தில் கன்னிகையை விவாஹம் பண்ணினார். சில திவஸங்கள் அந்நகரத்திலிருந்து மதனமஞ்சுஷையுடன் இஷ்டவிஷய காமபோகங்களை அனுபவித்து ஒருநாள் மாத்ருபிதா தாசனுஸந்தனாகி மாதுலாதி பந்துஜனங்கட்கு ப்ரயாணாபிப்பிராயத்தை அறிவித்து ஸ்வருராதி வித்யாதரர்களுடனேயும், மித்திரனோடேயும், மதன மஞ்சுஷையுடனும் ஸ்ரீ விமானருடனாகி ஆகாயதலத்தினால் ஸ்வபுரமடைந்தனன். அப்பொழுதே அவருடைய வரவை பிதாவானவர் அறிந்து நகரத்தை தோரணபதாகாரங் காவல்யாத்யஷ்ட சோபையினால் அலங்கரித்து விவிதவாத்யார வாஸம்யுக்துடன் பரிவார பௌரஜன ஸஹிதனாகி எதிர்கொண்டு புத்திரனைக் கண்டு பரமானந்தத்தினால் வாகந்த நேத்ரனும் புளகாங்கிதனுமாகி நிஜபுத்திரனை அலங்காரம் செய்து விஜயோப சாரத்துடன் நகரமடைவித்து வரப்பட்ட வித்யாதர ஜனங்களுக்கு உசித சன சயன போஜன பூவாதிகளைக் கொடுத்து ஸன்மானஞ் செய்து சில திவஸம் கழித்து வித்யாதரர்களை அவர்கள் இஷ்டப் ப்ரகாரம் நிஜ நகரத்தை அடைவித்தனன். பிறகு ரத்தின சேகரன் காமஸுக வினோதத்தினால் மதனமஞ்சுஷையுடன் காலங்கழித்தனன். பிறகு ஒருநாள் ரத்தினசேகரன் மதனமஞ்சுஷையுடனும், மித்திரனுடனும், விமானத்தால் மேருகிரியை அடைந்து ஜிநாலயத்திலிருக்கிற அக்ரத்திமஜிநபிம்பங்களை பூஜித்து நமஸ்கரித்து ஒரு ஜிநாலயத்தைத்ரிப்ர தக்ஷணம் செய்து நானாவித ஸ்துதிகளைச் செய்து வந்தித்து பரமானந்தத்தினால் அவ்விடத்திலிருப்ப, அப்போது ஆகாயத்திலிருந்து இழிந்து தஜ்ஜிநாலயத்தை இரண்டு முனிகள் ப்ரதக்ஷணம் செய்து வந்தித்து, ஸ்துதித்து, இருப்ப, அந்த அமிதகதி ஜிதாரி யென்னும் பெயரையுடைய; சாரண முனிகளை வந்தித்து அவர்களுடைய க்ஷேமத்தை விசாரித்து உட்கார்ந்து தர்ம்மனுவணனந்தரம் ராஜாவானவர் வினவினார்: வாரீர் யோகீஸ்வரர்களே! என்னுடைய புண்ணியாதிசய ஹேதுவையும் மதனமஞ்சுஷை மேகவாஹநர்களின் பேரிலிருக்கிற ஸ்நேஹ காரணத்தையும் ஸவிஸ்தாரமாகச் சொல்லக் கடவீரென்று கேட்க, முனிவரரும் சொல்லுவார்:

இந்த ஜம்பூத்வீப பரதார்யக்கண்டத்தும் தனலாநகரத்தில் ஜம்புனாத தீர்த்தங்கர தீர்த்தாந்தரத்தில், ராஜாஜிதாரி என்பான் தேவி கனகமாலை என்பாள் புரோகிதன் சுரத கீர்த்தி என்

ப்ரான் தத் ப்ராம்மிணீ பந்து மதித புத்திரி ப்ரபாவதி எண்பாள். அவளும் ராஜ புத்ரியுடனேகூட ஜைனபண்டித சமீபத்தில் படித்தாள். ஒரு நாள் பந்து மதியுடனேகூட அந்த புரோஹிதன் ஸ்வவஸ்தக்ரீடாம வனத்தில் க்ரீடிக்கிறதற்கு அடைந்தனன். க்ரீடாவஸானத்தில் பந்து மதி நித்ரை அடைந்தாள். புரோகிதனும் வனசஞ்சாரமடைந்தான். பந்து மதி சரீரகதபரிமளா சக்தியினால் ராத்ரியில் வரப்பட்ட ஸர்பத்தினால் கடிக்கப்பட்டவளாய் மரண மடைந்து இருப்ப புரோகிதனும் வனக்ரீடைசெய்து காந்தா ஸமீபமடைய; காந்தாவினுடைய மரணாவஸ்தையை அறியாதவனாகி பத்னியானவள் நித்ரை செய்கிறாள். நித்ராபங்கம் செய்தால் கோபாவேச மடைகுவள் என்று கருதி சிறிதுகாலஞ் சென்று எழுப்பியும் கைகளை யிழுத்துக் தூக்கவும் நித்ராளங்க மில்லாததால் ஸந்தேஹித்து எழுப்ப, பேசாததால் துக்காக்ராந்தனாகி மோகசோக மடைந்தான். பிறகு அவன் மோகத்தினால் தேஹத்தை ஸம்ஸ்காரம் பண்ண கொடாநின்றானில்லை. எப்பொழுது புரோஹிதன் அவள் சோக மோஹத்தால் மூர்ச்சை யடைந்து நித்ரைபண்ண பந்துக்கள் அவளுடைய தேஹத்தை தகனஞ் செய்து சமீபமடைய பிறகு திர்க்ககாலம் சுரத கீர்த்திப்புரோஹிதன் காந்தாவிரஹ சோகத்தைவிட்டானில்லை அக்காலத்தில் புத்ரியாகிய ப்ராபாவதி பிதாவை ஒரு முனிஸமீபமடைவித்தனள். முனிவரால் போகிதனாகி திகம்பர விரதத்தை அடைந்து மந்திரவாத படனத்திலும் சாரித்ரத்தில் சஞ்சல சித்தனாயினன். வித்யாசித்தி நிமித்தம் மந்திர ஜெபத்தில் புஷ்பாதிகத்தை கொடுக்க நூதன முனியால் ப்ரபாவதி ஒரு கிரிகுகையை அடைவிக்கப்பட்டாள். அவளால் கொடுத்த குஸுமாதிகளால் மந்திரஜெபத்தைச் செய்கிற ப்ரோதிகமுனிக்கு அநேக வித்யா சமூகம் சித்தியை அடைந்தன. வித்யாபலத்தால் ஒரு நகரத்தைச்செய்து விசித்ர வஸ்தராபரண ஸஹிதமாகிய சுந்தஹி சயமுக ஜகன வதநஸ்தந யுகலி சோபா சஞ்சிதமாகிய ஸுந்தர ஸ்திரீ ரூபங்களைச் செய்து வித்யா மயதாருண்ய ஸ்திரீகளுடைய காமாதிசய ஸௌக்யங்களை அனுபவிக்க தொடங்க, ஸ்ரீ ஸுதகீர்த்தி ப்ரஷ்டமுனியும் மோஹாக்ராந்தனாகி ஒரு வித்யா யௌவந ஸ்திரீயினுடைய தேஹத்தை கரங்களால் பந்தித்து, இன்னும் பல ஸ்திரீகளைத்தழுவியும் இன்ப மனுபவித்தான்.

இவன் காமலோலனாய் விவித விசித்ர வாசா மநோசர குசேஷ்ட மதனசுகங்களை அனுபவித்தானென்றும் புஷ்பாஞ்சலி காவ்யாதிகளில் இவனுடைய சரித்திரம் பகுளமாய் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் என்னால் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. இவனுடைய காமலோலா சக்தியை ப்ரபாவதிகண்டு பிதாவைப் பார்த்து போதிக்கிறாள். வாராய் பிதாவே! சதுர்க்கதி ஸம்ஸாரதுக்காதித்யத்தை கொடுக்கப்பட்ட ஜிநதீக்ஷையை விட்டு திர்யக்கதி, நரககதி துன்பங்களை கொடுக்கப்பட்ட நிராதர காமஸுகாபி

லாஷையைவிட்டு முன்போல் மோக்ஷ ஸ்திரீயினுடைய அவினஸ்வரமான பரமசுகத்தை அடைய எத்தனம் பண்ணக்கடவாய் என்று சொல்லப்பட்ட இத்யாதிசார வாக்யத்தைக் கேட்டு பிதாவானவர் சொல்லுவார். நீயானவன் எனக்கு போதிக்கவேண்டாம். என்று பதில் சொல்லியும் அடிக்கடி தகப்பனுக்கு போதிக்க பிதா கோபித்து வித்யையினல் மஹாரண்யத்தில் ஸ்தாபித்துவிட அவள் ஜிநதர்மம் ஜபத்யானுஷ்டானத்தால் காலம் கழித்திருப்ப, மறுபடி சில சில திவசம்கழித்து ஸுதகீர்த்தி, என்கிற பிதாமுனி யானவர் அவலோகிநீ வித்யை அனுப்ப, அதுவும்சென்று ப்ரபாவதியைக் கண்டு சொல்லுகின்றது. வாராய் ப்ரபாவதியே! யத்ரதேசித்த பவதிதத்ர நயாமிதி யாதொரு இடத்தில் கமனபிலாஷை யிருக்கிறது. அவ்விடத்தில் அடைவிக்கிறேனென்று சொல்ல; ப்ரபாவதியும் சொல்லுவாள், வாராய் அவலோகினியே! கைலாச கிரியை செல்லவும். பார்க்கவும் அபிலஷிக்கிறேனென்று சொல்லக்கேட்டு அவலோகினி வித்யையும் ப்ரபாவதியை விமானத்தா லேற்றிக் கொண்டு போகி கைலாசகிரியில் விட்டுப் போய்விட்டது. அந்த ப்ரபாவதியும் தத்ரஸ்தமாகிய ஸர்வ ஜிநாலயங்களையும் ப்ரதக்ஷணம் செய்து பூஜித்து ஸ்துதிசெய்து ஒரு ஜிநாலயத்திலிருப்ப, அவ்வளவு காலத்திற்குள் பத்மாவதி தேவியானவள் வந்தாள். ஜிநபதியை வந்தித்து பூஜித்து ஜிநாலயத்தினின்றும் அப்பொழுது வெளியே போகிறதற்கு புறப்பட்டாள். அவ்வளவில் கன்னிகையைக் கண்டு நீயாரென்று வினவ. அவளும் நிஜவிர்த்தாந்தத்தினை ஸர்வத்தையு சொல்லிக் கொண்டு இருக்கும் சமயத்தில் சர்வ தேவர்களும் பரிவாரத்துடன் வந்து ஜிநபதிகளை பூஜிக்க, அந்த சமயத்தில், தேர்களைக்கண்டு கன்னிகை யானவள் பத்மாவதியை நோக்கி ஹேதேவி என்ன காரணம் தேவர்கள் வந்திருக்கிறார்கள். என்று கேட்க அவளும் இப்படி என்று சொல்லுவாள்.

இப்பொழுது பாத்ரபத மாஸே சுக்கிலபக்ஷ பஞ்சமி தினம் வர்த்தியா நின்றது. இந்த தினத்தில் புஷ்பாஞ்சலி விதிவிதானம் இராநின்றது. அந்த புஷபாஞ்சலி விதிநோன்பை க்ரமதுடன் செய்ய வந்திருக்கிறார்களென்று சொல்லக் கேட்டு, வாராய் தேவியே! அந்தவிதி கிரமத்தை எனக்கு ஸவிஸ்தாரமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்க, பத்மாவதியும் இப்படி என்றனள். வாராய் கன்னிகையே சொல்லுகிறேன் கேள். பாத்ர பதாஸ்வீயுஜ கார்த்திக மார்க்கசிர்ஷ புஷ்யமாக பால்குண சைத்ரமாசங்களில் யாதானு மொரு மாஸத்தில் சுக்கலபக்ஷ பஞ்சமி திதியில் உபவாஸ பூர்வகம் பூர்வாண காலம் தொடங்கி, ஜாமம் க்ராமந்தோறும். சதுர்விம்சதி தீர்த்தங்கர ப்ரதிமைகளுக்கு அபிஷேக பூஜை செய்து சதுர் விம்சதி தண்டுல புஷ்பங்களை ஜிநேஸ்வரர்களினுடைய முன்னில், ஓம் ஐம், க்ரீம், ஸ்ரீம் மம, பத்திரம் பவது ஸுவாஹா என்று இந்த மந்திரத்தினல புஞ்சமிட்டு யக்ஷிதேவதைகளுக்கு த்வாதச புஞ்சங்கள்

செய்து ப்ரதக்ஷணம் செய்து தீர்த்தங்கர நாமதேய பூர்வகம் புஷ்பாஞ்சலி செய்வது எப்படி எனின்

(ஸ்லோகம்.)

1. த்ரிதசராஜபூஜிதம் வ்ருஷபநாதமூர்ஜிதம்।
கநககேதகைர்யஜே பவவிநாசகம் ஜிநம் வ்ருஷப
[தீர்த்தங்காராய புஷ்பாஞ்ஜலிம் கரோமி॥

2. அஜிதநாமதேயகம் புவநபவ்யஸௌக்யகம்।
விகசசம்பகைர்யஜே பவவிநாசகம் ஜிநம் அஜிததீர்த்த
[ங்காராய நம

3. நோமிவிஷ்ணுஷம் ஸகலபோதஸம்யுதம் தமிஹ சம்பவம்
[யஜே।
ஸுரபிசந்த்வாரகைர்பவவிநாசகம் ஜிநம்॥

1. த்ரிதசராஜ பூஜிதம், விரஷபனுத மூர்த்திதம்
கனக கேத கைர்யஜே பவவினசகம்சினம்
ரிஷப திர்த்தங்கராய புஷ்பாஞ்சலி கரோமி ஸ்வாஹா

2. அஜித நாம தேயகம், புவனபவ்ய சௌக்யகம்
விகசசம்ப கைர்யஜே பவவினசகம்சிமைம்
அஜிததீர்த்தங்கராய நம:

3. ஸகலபோத ஸம்யுதம் தமிஹ சப்பவம் யஜே
ஸுரபிசந் துவாரகைர் பவவினசகம்சினம்

சப்பவ திர்த்தங்கராய புஷ்பாஞ்சலிம் கரோமிஸ்வாஹா: ஹெதி இப்பிரகாரம் சின்ன புஷ்பாஞ்சலிஸ் ஸ்லோகத்தைப் படித்து புஷ்பாஞ்சலி செய்வது, ராத்ரி ஜாகரணம்செய்து த்வதிய திவஸத்தில் யாகமத்வயம் ஜாகரணம்செய்து பாரணு திவசத்தில் சதுர்விம் சதி பதிகளை ஸ்தாபிப்பது அதவா அஞ்சு, அதாவது; ஒன்று யதிகளை ஸ்தாபித்து ஆஹாரங்கொடுப்பது இல்லாவிடில் ஸத்பாத்ர புண்ணியங்க நாத்வயத்துக்கு போஜன ஸுவர்ண வஸ்திராதிகளைக் கொடுத்து, எ. ஐம். கம். மாநுடிங்க பலம்கெடுப்பது ஏவம் சதுர்த்தினுதி புஷ்பாஞ்சலிசெய்து நவமியில் ம்யாதிதெள உபவாசஸம் செய்து ஜிநாபிஷேகத்தையும் செய்து புஷ்பாஞ்சலி செய்யக்கடவது உத்த ப்ரகாரமான புஷ்பங்கள் கிடைக்காவிட்டால் பஞ்சபிரகாரமான புஷ்பங்களினுல் புஷ்பாஞ்சலிசெய்வது இந்த பிரகாரம் மூன்று வருஷங் கழித்து உத்யாபனம் செய்கிறகாலத்தில் சதுர்விம்ஸதி ப்ரதிமைகளை செய்வித்து ஜிநாலயங்களுக் கொடுப்பதும் ரிஷிகள்பொருட்டு புஸ்தகம் முதலானதும் கொடுப்பதும், சாதுர்வர்ணமாகிய முனி ஆர்யாங்கனிஸ்ராவக ஸ்ராவகிகளுக்கும் யதாசக்தி ப்ரகாரம் போஜன வத்ஸ்ர

பாணம் முதலானதும் கொடுப்பது எதத்பலத்தினால் ஸ்வர்க்காபவர்க்க தகமாகா நின்றது. உத்ப்பனம் செய்கிறதற்கு சக்தியில்லை யாகில் பஞ்ச வருஷங்கள் ஸுவர்ண வர்ண தண்டுலங்களை புஷ்பாஞ்சலிஸம் கல்பத்தினால் செய்வது தத்பலம் ப்ராப்தியாகும் கன்னிகையினால் சொல்லப்பட்டது என்னால் இந்த வழியானது க்ரஹிக்கப்படா நின்றது பத்மாவதி தேவியால் சொல்லப்பட்டது. குமாரியே க்ரஹித்து கேள் பூலோகத்தில் மானவ ஜனங்களுக்கு இந்தநோன்பையும் உத்தமமான கிரமத்தையும் சொல்லி விதி ப்ரகாரத்தால் அனுஷ்டித்து ப்ரகாசிக்கக்கடவாய் என்று சொல்லிப் பிறகு பஞ்சதினங்கள் பத்மாவதியுடனே ப்ரபாவதியும், கைலாஸகிரியிலேயே விதிப்ரகாரம் இந்நோன்பை அனுஷ்டித்தனள். சர்வ தேவர்களும் புஷ்பாஞ்சலிவதி கிரமத்தைச் செய்துஸவஸ்தானத்தை அடைந்தனர்கள். உடனே பத்மாவதியும் ப்ரபாவதியை ம்ருணாலிபுரத்தை அடைவித்தாள். ப்ரபாவதியும் பூதிலக ஜினாலயத்தை ப்ரவேசித்து தேவனை வந்தித்து ஸ்துதித்துத்ரிபுவன ஸ்வயம்பு என்று நாமத்தையுடைய முனீஸ்வரனையும் வந்தித்து முனி ஸமீபத்தில் தீக்ஷையை யாசித்தனள். அவரும் அருளிச்செய்வள். உன்னால் ப்த்ராதூர்பம் செய்யப்பட்டது. வாராய் கன்னிகையே! உனக்கு ஆயுஷ்யம் மூன்று நாள் தானிருக்கிறதென்று சொல்லப்பட்ட வாக்கியத்தைக் கேட்டு சதுர்க்கதி சம்சாரத்தில் பீத பீதயாகிய ஜிநதீக்ஷையை தரித்து ஆர்யகையாகிய புஷ்பாஞ்சலி விதியை ப்ரகாசிக்கப் பட்டவளாக இராநின்றாள். இதன் பிறகு பிதாவானவர், புத்திரியானவள் இப்பொழுது எப்படியிருக்கிறாள் பார்த்துவா என்று அவலோகினி வித்யை அனுப்பினார். வித்யையும் போகி அவளாலே நிஜ விருத்தாந்தம் சொல்லப்பட்டுள்ளவளவில் வந்து பிதாவுக்கு தீக்ஷாதிவதியை வித்தையானது சொல்லிற்று. அது கேட்டு வாராய் தேவதையே! புத்திரியுடைய தபோவிநாசத்தைச் செய் யென்று சொல்லி அனுப்ப தபஸை கொடுக்க முடியாத தாகியிருப்ப மறுபடியும் உபஸர்க்கம் செய்ய அவள் நிச்சல சித்தத்தை யுடையவளாய் தர்ம்மத்யானத்திலிரா நின்றாள் அவளுடைய விரத ப்ரபாவித்தால் தானேந்திரனும்; பத்மாவதியும் ஸஹிதமாக குறுகுதலும் அவளைக் கண்டு வித்யை யானது ஓடிவிட்டது. சரீரத்யாகம் செய்து வ்ரதப்ரபாவத்தால் அச்சுதகல்பத்தில் பத்மாவர்த்த விமானத்தில் பத்ம நாப னென்கிற மகர்த்திக தேவனாக ஆனாள்.

(இன்னும் வரும்)

அப்பாண்டைநாத சாஸ்திரியார்,

பெருமண்டூர்,

210462

மலையைவிழுங்கிய

மகாதேவன் கதை.

இது, ஓயாச்சிரிப்பைத்தரும் ஒரு மாயா விநோதக்காரன் கதை. இதில் மகாதேவனென்ற ஜெகஜாலப்புரட்டன், இளமையிலேயே இந்திர ஜாலங்களைச்செய்து ஜனங்களை ஏமாற்றுவது, மலையை விழுங்குகிறேனென்று ஒரு பிரபுவையும் ஊர் ஜனங்களையும் ஏமாற்றுவது, மாயா முயல்களை வளர்த்து தஞ்சாவூர் எத்தர்களை ஏமாற்றி, அந்த முயலை விலைக்குக் கொடுத்து அவர்களுடைய ஐவேசுகளையெல்லாம் கைப்பற்றிக் கொள்வது, சாமியார் வேஷம் போட்டு உயிரோடு சமாதியாகி மனிதர்களை ஏமாற்றுவது, தஞ்சாவூர் எத்தர்களின் மூக்கைக் கத்தரித்து அவர்களைச் சொல்லாமலோடும்படி செய்வது, தாசிகளை ஏமாற்றி ரயிலில் சக்கின்கிளாஸ் வண்டியில் பிரயாணஞ்செய்வது ரயிலில் சென்ற நாட்டுப்புரத்தானைச் சக்கின்கிளாஸ் வண்டியில் ஏறச்செய்து போலீஸ் சங்கடத்தில் மாட்டிவைப்பது முதலிய பல விநோத செய்கைகளெல்லாம் அடங்கி யிருக்கின்றன. விலை அணா-6.

விநோதகதைத் திரட்டு.

இது, அடங்காச்சிரிப்பை யுண்டாக்கி, அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் பல கதைத் தொகுதிகள் அடங்கிய புத்தகம். இதில், தமிழ்ப்பாவிருப்பக் கதை, கூட்டத்திற் புகுந்து வாட்டமடைந்தவர் கதை, அதிகப் பேச்சால் அவஸ்தையடைந்த கதை, பேராசை பெருநஷ்டமான கதை, பெருங்குடியர் இருவர் கதை, பெண்பிள்ளை திருடனைப் பிடித்த கதை, வெளிகொடுத்த கதை, செருக்கால் தீங்கடைந்த கதை, திருடர்கள் வித்வானுக்குச் சன்மானஞ் செய்த கதை, விஷயம் தெரியாமல் சண்டையிட்ட கதை, பெருங்காயம் வாங்கிய கதை, சிலேடைப் பேச்சால் அவமானமடைந்தவன் கதை, விநோத சிலேடைக் கதை, பகல் திருடன் கதை, வாக்குச் சாதுரியத்தால் இலாபம்பெற்ற புலவர் கதை, செம்பும் போனதே கோவிந்தா என்ற கதை, சிலேடைப் புலவர் கதை பேர்போன செவிடன் கதை, பஞ்சலக்ஷணக் கதை, ஒரு சிலேடைக்கதை, கொடாக்கண்டன் கதை, விபூதியால் செல்வங்கொடுப்பவன் கதை, கொசுகு சிங்கத்தை வென்ற கதை, தென்னமரத்தில் புல்பிடுங்கின கதை, புலியிடம் வட்டிக் கணக்குத் தீர்க்கப்போன செட்டியார் கதை, தாடிக்குத் தர்க்கம்பேசிய சாமியார் கதை, கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போன கதை, செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார் என்ற கதை, வேலை கடுமையான வேலை எஜமான் இன்னதென்று தெரியவில்லை என்ற கதை, நன்றியுள்ள எருதின் கதை ஆகிய சமார் முப்பது கதைகளுக்குமேல் அடங்கி யிருக்கின்றன. சகலரும் வாங்கிப் படிக்கத் தகுந்த அருமை வாய்ந்த புஸ்தகம். விலை அணா 5 தான்.

ஸ்ரீபாலன்.

படிக்கப்படிக்க இனிமையைத் தரும் மகா அற்புதம் வாய்ந்த கற்புள்ள நாவல், நவரசங்களும் பொருந்தியது. மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுப்பது விலை அணா 10.

உ தயணன்.

இது, மனதைக் கவரத்தக்க மகாமேன்மை தங்கிய தமிழ் நாவல். சிறந்த வித்வானால் எழுதப்பட்டது. பள்ளிக்கூடத்து மாணவர்களும், மற்றவர்களும் விரும்பிப் படிக்கத் தகுந்தது. அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கத் தக்கது. விலை அணு 8.

நரிவிருத்தம் மூலமும் உரையும்.

இந்நூல், சீவகசிந்தாமணியை இயற்றிய ஆசிரியராகிய திருத்தக்க தேவரால் செய்யப்பட்டது. வித்வான்களும் உச்சிமேற் கொள்ளத் தக்கது. விரிந்த உரையோடு கூடியது. உயர்ந்த நீதிகளைப் போதிப்பது. எவரும் எளிதில் படித்துணரத் தக்கது. விலை அணு 4.

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை.

இப்புத்தகத்தில் ஆனந்தமாய் அமைந்துள்ள ஒவ்வொரு அத்தியாயத்தைப் படிக்கப் படிக்க ஆனந்தம் உண்டாகும். புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது. வயிறு குலுங்கச் சிரிப்புண்டாகும். இதில், வாயாடிச்சுப்பி மணப்பேச்சு, தாலிகட்ட மறந்து செய்யுங் கலியாணம், கலியாணத்தில் அம்பட்டன் அவஸ்தை, மாப்பிள்ளைக்கு மீசை மொட்டையாதல், கலியாணத்தில் பஞ்சாங்கக்காரர் கலகம், கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்து விடுவது, கலியாணப் பெண்ணே பந்திபரிமாறும் வேடிக்கை, விநோத ஊர்வலம், சுப்பம்மாளின் வேடிக்கை இல்வாழ்க்கை, சித்திரக் குள்ளியின் தெய்வ பக்தி, சுப்பம்மாளின் கெட்டிக்காரத்தனம், சுப்பம்மாளின் கற்பு லக்ஷணம், மண்ணை நம்பி மரமிருக்க மரத்தை நம்பி யிலையிருக்க உன்னை நம்பி நானிருக்க உலகம் பொறுக்கவில்லை என்பது, இரத்தினசாமி பிள்ளையினுடைய இல்வாழ்க்கை முடிவு; முதலிய பல விநோத விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. வேண்டியவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற் செழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை அணு 5

தருமசீலன் புக்டிபோ,
1/2 பாலகிருஷ்ணன் சந்து, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

புதிய இனிய பிரயோசனமான புத்தகங்கள்.

தனபாலன்:—(மாணவர்கட்கானது.) அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது ... விலை அணு 2.

சத்திய காமன்:—(ஓர் நவரசம் ததும்பிய இனிய நாவல்) ... விலை அணு 12.

(தபாற்கூலி வேறு.)

L. S. K. சாமி,
"கதாசிரியன்" ஆபீஸ்,
குடியாத்தம்.